2017 ஜனவரி 27]

செய்கின்ற வகையில் இன்றைக்கு முனைப்போடு செயல்பட்டுக் கொண்டிருக்கின்றது. அந்த வகையில் மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்கின்ற அந்தப் பகுதியில் தேவையின் அடிப்படையில் அரசு பரிசீலிக்கும் என்பதை இந்த நேரத்தில் சுட்டிக்காட்டக் கடமைப்பட்டிருக்கின்றேன்.

*முற்பகல் 10–50*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 6, மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார், மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**6—**

**சிறு தானிய சத்துணவு**

*__663—திரு. எச். வசந்தகுமார்:__

*மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) சத்துணவு மையங்களிலுள்ள குழந்தைகளுக்கு குதிரைவாலி, சாமை, தினை போன்ற சிறு தானிய உணவுகள் வழங்கும் செயற்குறிப்பு அரசிடம் உள்ளதா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா, சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இமயத்துப் புகழே, இயக்கத்தின் இமையே, இரக்கத்தின் வடிவே, ஈடில்லா வளமே, தமிழக மக்களின் துயர் துடைத்து, இன்று வங்கக் கடலின் மடியில் துயில் கொண்டிருக்கும் எங்கள் தங்கத்தலைவி, மாண்புமிகு அம்மா அவர்களை வணங்கி, என் விடையைத் தொடங்குகிறேன்.*

*(அ) இல்லை.*

*(ஆ) வினா எழாது.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

[2017 ஜனவரி 27

**திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இல்லையென்ற பதிலை உடனடியாகக் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைச் சொல்லிக்கொள்கிறேன். தமிழக பண்பாடு, வீரத்தையெல்லாம் குறித்து பேசிக்கொண்டிருக்கின்ற இந்தக் காலக்கட்டத்தில், தமிழர் பரம்பரையாக இருக்கின்ற அந்த குதிரைவாலி, சாமை, தினை போன்ற சிறு தானியங்கள் நிறைந்த சத்துணவினை நமது அம்மா சத்துணவுக் கூடங்களில், அதாவது 'அம்மா உணவகங்க'ளிலும், பள்ளிக்கூடங்களிலும், நமது சட்டமன்றப் பேரவை உறுப்பினர்கள் உண்ணுகின்ற சிற்றுண்டி சாலைகளிலும் வழங்குவதற்கு நீங்கள் ஏற்பாடு செய்து கொடுத்தால், அழிந்துகொண்டிருக்கின்ற அந்த சிறு தானியங்கள் மீண்டும் உயிர் பெற்று, நமது உயிரை நன்றாகக் காப்பதற்கு வசதியாக இருக்கும் என்பதற்காகவும், அதை எந்தெந்த விவசாயிகள் பயிரிடத் தயாராக இருக்கின்றார்களோ, அவர்களுக்கு ஊக்கத் தொகையை கொடுத்து, அதையும் நாம் ஊக்குவித்தால், வருங்கால சந்ததியினர் வெளி நாட்டு உணவை உண்ணாமல், உள் நாட்டு உணவில் சத்து இருக்கிறதென்று கருதும் நிலை ஏற்படும். அதற்காக, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் ஏற்பாடு செய்வார்களா என மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களுடைய அரசால், குழந்தைகளினுடைய வயதிற்கேற்பவும், வளர்ச்சிக்கேற்பவும் சரிவிகித உணவாக, சத்துணவுத் திட்டமாக, 13 வகையிலான புதிய வகை கலவை சாதங்களுடன், 4 வகையான மசாலா முட்டைகள் வழங்கும் திட்டத்தை ஒவ்வொரு மாவட்டத்திலும் ஒவ்வொரு முன்னோடி வட்டாரம் தேர்வு செய்யப்பட்டு, 20–3–2013 முதல் அத்திட்டம் துவங்கப்பட்டு, பின்னர், அனைத்து மாவட்டங்களிலும், அனைத்து வட்டாரங்களிலும் 15–8–2014 முதல் 43,307 சத்துணவு மையங்கள் மூலமாக செயல்படுத்தப்பட்டு, தற்போது 55 இலட்சம் பள்ளிக்குழந்தைகள் பயனடைகிறார்கள். ஆதலால், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கேட்டுக்கொண்டதற்கிணங்க, சத்துணவில் சிறு தானியங்களாகிய சாமை, தினை போன்றவற்றை சத்துணவில்*

சேர்க்க வேண்டிய அவசியம் இல்லையென்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக தெரிவித்துக்கொள்கிறேன்.

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திரு. எச். வசந்தகுமார் அவர்கள்.*

**திரு. எச். வசந்தகுமார்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஒவ்வொரு உணவிலும் ஒரு சத்து இருக்கும். அது வேளாண்மைத் துறைக்குத் தெரியும். இருந்தாலும், நீங்கள் எல்லாவிதமான தானியங்களையும் சேர்த்து விட்டோம் என்று சொன்னீர்கள். அதற்கு நன்றி. முடிந்தால் இவற்றையும் சேர்த்து வழங்கி விவசாயிகளையும் காப்பாற்றுங்கள் என்றுதான் நான் சொல்லிக்கொள்கிறேன். நன்றி.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவுத் திட்டம், சரிவிகித உணவுத் திட்டமாக தொடர்ந்து வெற்றிகரமாக மாணவர்களால் ஏற்கப்பட்டு, பொது மக்களால் வரவேற்கப்பட்டு, நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற இந்த திட்டமானது, உலக நாடுகளே வியந்து பாராட்டுகின்ற உன்னதத் திட்டமாக விளங்குவதால், இதற்கு மேற்கொண்டு சிறுதானியங்களை சேர்க்க வேண்டிய அவசியம் இல்லை என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் வாயிலாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு உறுப்பினர் திருமதி பி. கீதா ஜீவன் அவர்கள்.*

**திருமதி பி. கீதா ஜீவன்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சத்துணவு மையங்களிலுள்ள குழந்தைகளுக்கு என்னென்ன தானிய வகைகள் தற்போது வழங்கப்பட்டு வருகின்றன என்பதை மாண்புமிகு அமைச்சர் அவர்கள் மூலமாக அறிய விரும்புகிறேன்.*

*முற்பகல் 10—55*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *மாண்புமிகு சமூக நலன் மற்றும் சத்துணவுத் திட்ட அமைச்சர் அவர்கள்.*

**மாண்புமிகு டாக்டர் வி. சரோஜா:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் என்னென்ன வகையான காய்கறிகளைச் சேர்க்க முடியும் என்ற கேள்வியைக் கேட்டிருக்கிறார்கள். கலவை சாதத்தில் அனைத்துக் காய்கறிகளும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. குறிப்பாக, முட்டை இதில் ஏன் சேர்க்கப்பட்டிருக்கிறது என்றால், மற்ற சிறு தானியங்களைவிட 6.1 கிராம் புரதச்சத்து முட்டையில் அதிகமாக இருக்கிறது என்பதையும், மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் குறிப்பிட்ட அந்த சிறுதானியங்களில் இருக்கின்ற புரதச்சத்து 2 கிராம் அல்லது 4 கிராமிற்குக் குறைவாக இருப்பதால் குழந்தைகளுடைய வளர்ச்சிக்கும், அவர்களின் தேவைக்கும் அது போதுமானதாக இல்லை. ஆகவே, முட்டை கொடுப்பதன்மூலம் ஏற்படுகின்ற புரதச்சத்தினுடைய அளவு சரி செய்யப்படுகிறது என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.*

**மாண்புமிகு பேரவைத் தலைவர்:** *வினா வரிசை எண் 7, மாண்புமிகு உறுப்பினர் திரு. உ. மதிவாணன், மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள்.*

**7—**

## நெல் கொள்முதல் நிலையக் கட்டடம்

***3539—திரு. உ. மதிவாணன்:**

*மாண்புமிகு உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—*

*(அ) கீழ்வேளூர் தொகுதி, நாகப்பட்டினம் ஊராட்சி ஒன்றியம், வடுகச்சேரி ஊராட்சியிலுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்திற்குச் சொந்தக் கட்டடம் கட்ட அரசு முன்வருமா?*

*(ஆ) ஆம் எனில், எப்போது?*

**மாண்புமிகு திரு. இரா. காமராஜ், உணவு மற்றும் நுகர்பொருட்கள் வழங்கல் துறை அமைச்சர்:** *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் வணங்குகின்ற தெய்வம், என்னை வாழ வைக்கும் தெய்வம், இதய தெய்வம் புரட்சித் தலைவி அம்மா அவர்களின் பொற்பாதங்களை வணங்குகிறேன்.*